மாகாணக்கல்வித் திணைக்களம்
வடக்கு மாகாணம்
**முன்னோடிப் பரீட்சை – 2024**

| | | | | |
|---|---|---|---|---|
| இஸ்லாம் Islam | Two Hours / Gr - 13 (2024) | T | 44 | I |

**சரியான விடையின் கீழ் கோடிடுக.**

1. அல்லாஹ்வுக்குரிய வாஜிபான பண்புகளில் இராததுன் என்பதன் கருத்து
   1. பார்வை 2.நாட்டம் 3.சக்தி 4.உயிர் 5. கேள்வி

2. ரூஹுல்லாஹ் எனும் சிறப்பு பெயரால் அழைக்கப்பட்ட இறைத்தூதர்
   1. நபி மூஸா (அலை) 2. நபி நூஹ் (அலை) 3. நபி ஆதம் (அலை 4. நபி இப்ராஹிம் (அலை) 5. நபி ஈஸா (அலை)

3. மௌன இஜ்மாவை குறிக்கும் சொல்
   1.ஸரீஹ் 2.கௌலி 3.முரக்கப் 4.அக்ஸரிய்யா 5. சுகூத்தி

4. தக்வா எனும் பதம் குறிப்பது
   1.இறையச்சம் 2. உளத் தூய்மை 3. பற்றற்ற வாழ்வு 4. பேணுதல் 5. தகிய்யா

5. ஷிர்க்குல் கபீ என்பதனால் கருதப்படுவது யாது
   1. தெளிவான ஷிர்க் 2. மறைவான ஷிர்க் 3. சிறிய வகை ஷிர்க் 4. எண்ணம் சார்ந்த ஷிர்க் 5. வெளிப்படையான ஷிர்க்

6. இஸ்லாத்தின் சிறப்பம்சங்களில் அல்லாத கூற்றை தெரிவு செய்க.
   1. தெய்வீகத் தன்மை வாய்ந்தது 2. நடுநிலைப் பேணுதல் 3. யதார்த்தமானது 4. சமூக நலன்களுக்கு மத்தியில் சமநிலை பேணாமை 5. சர்வதேச மயமானது

7. ஹதீஸின் அறிவிப்பாளர் வரிசையை குறிக்கும் சொல்
   1. மதன் 2. ஸனத் 3. கபர் 4. விகாயத் 5. முஹத்திஸ்

8. அரபாவில் தரித்திருக்க வேண்டிய நாள்
   1.துல்ஹஜ் பிறை 8 2. துல்ஹஜ் பிறை 9 3. துல்ஹஜ் பிறை 10 4. துல்ஹஜ் பிறை 11 5. துல்ஹஜ் பிறை 12

9. சிரியா, துருக்கி வழியாக வருபவர்களுக்கான மீகாத்
   1. ஜுஹ்பா 2. யலம்லம் 3. கர்னுல் மன்ஸில் 4. துல் குலைபா 5. தூத்துல் இராக்

10. 250 ஆடுகள் வைத்திருப்பவர் ஸகாத்தாக கொடுக்க வேண்டிய ஆடுகளின் எண்ணிக்கை
    1. ஒன்று 2.இரண்டு 3. மூன்று 4. நான்கு 5. ஐந்து

11. ஒரு ஹதீஸின் இஸ்னாத் ஸஹாபி வரை மட்டும் செல்லல்

1. மர்பூஃ 2. மவ்கூப் 3. முர்ஸல் 4. மக்தூம் 5. முஅல்லக்

12. இமாம் முஸ்லிம் (ரஹ்) அவர்கள் பிறந்த ஆண்டு

1.ஹி 194 2.ஹி 204 3.ஹி 208 4.ஹி 209 5. ஹி 215

13. ஹதீஸ்களை எழுதி, பதிவு செய்து பாதுகாக்கும் பணி எவ்வாறு அழைக்கப்பட்டது

1. அஸ்மாஉர் ரிஜால் 2. இல்முல் ஜரஹ் வத்தஃதீல் 3. தக்யீதுல் இல்ம் 4.உஸூலுல் ஹதீஸ் 5. உலூமுல் குர்ஆன்

14. ஷீஆக்கள் தமது மறைந்து போன இமாம் மீண்டும் வருவார் என்றும் அவர் ஷிஆக்களின் உரிமைகள் அனைத்தையும் மீட்டிக் கொள்வார் என்றும் நம்புகின்றனர். கொள்கையை குறிப்பிடுவது

1. தீனா 2. முத்ஆ 3. தகிய்யா 4. ரஜ்ஆ 5. தனாஸுக்

15. நாஸிக், மன்ஸூக் ஆகிய சொற்கள் தொடர்பான சரியான கூற்று

1. நாஸிக் என்பது முதலில் அமுலில் இருந்த சட்டத்தை குறிக்கின்றது மன்ஸூக் என்பது புதிய சட்டத்தை குறிக்கிறது

2. நாஸிக் என்பது பலமான ஹதீஸுகளை குறிக்கின்றது மன்ஸூக் என்பது பலம் குன்றிய ஹதீஸ்களை குறிக்கின்றது

3. நாஸிக் என்பது அல்குர்ஆனுக்கு கொடுக்கும் மறைபொருள் விளக்கமாகும் மன்ஸூக் என்பது அல்குர்ஆனின் நேரடி விளக்கமாகும்

4. நாஸிக் என்பது மாறிய புதிய சட்டத்தை குறிக்கும் மன்ஸூக் என்பது மாற்றப்பட்ட சட்டத்தை குறிக்கின்றது

5. நாஸிக் என்பது தெளிவான சட்டங்களை குறிக்கின்றது மன்ஸூக் என்பது மறைமுக கோரிக்கைகளை குறிக்கின்றது

16. இஸ்லாமிய வரலாற்றில் சூபிகள் என்போரை மாத்திரம் உள்ளடக்கும் தொகுதியினை தெரிவு செய்க

1. புழைல் இப்னு இயாழ், வரக்கத் இப்னு நௌபல், அப்துல்லாஹ் இப்னு ஸபா

2. ஷகீக் அல்பல்கீ, வரக்கத் இப்னு நௌபல், அப்துல்லாஹ் இப்னு ஸபா

3. ஷகீக் அல்பல்கீ, வரக்கத் இப்னு நௌபல், இப்ராஹிம் இப்னு அத்ஹம்

4. ஷகீக் அல்பல்கீ, வரக்கத் இப்னு நௌபல், இப்னு அரபி

5. இப்றாஹீம் இப்னு அத்ஹம், புழைல் இப்னு இயாழ், ஷகீக் அல்பல்கீ

17. இமாம் புகாரி ரஹ்மத்துல்லாஹ் அவர்கள் புகாரி கிரந்தத்தில் பதிவிட்ட ஹதீஸ்களின் எண்ணிக்கை

1. 7275 2.4000 3.4800 4.4341 5. 7725

18. நபி (ஸல்) அவர்களினால் யமன் தேசத்திற்கு கவர்னராக அனுப்பப்பட்ட சஹாபி

1.அம்ர் இப்னு ஆஸ் (ரலி) 2. ஹஸ்ஸான் இப்னு ஸாபித் (ரலி)
3. முஆத் இப்னு ஜபல்(ரலி) 4.அலி (ரலி) 5. முஆவியா (ரலி)

19. ஒருவர் தன் மனைவியை உடல் ரீதியாக தன் தாய்க்கு ஒப்பிடுவதன் மூலம் ஏற்படும் மணமுறிவு
1. ஈலாஉ 2.பிராக் 3. லிஆன் 4.லிஹார் 5. பாயின்

20. மத்ரஸது அஹ்லிர் ரஃயி எனப்படுவோர்
1. சுய சிந்தனைக்கு முக்கியத்துவம் கொடுத்து சட்டங்களை விளக்குவோராவர்
2. ஹதீஸ்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து சட்டங்களை விளக்குவோராவர்
3. இஜ்திஹாத் செய்வதற்கு தகைமை பெற்றோராவர்
4. மதுஹபுகளை பின்பற்றுவதில் தீவிர ஆர்வம் கொண்டோராவர்
5. முஃதஸிலா சார்பு சிந்தனையுடையோராவர்

21. நபி (ஸல்) அவர்களை அவர்களது தோழர்கள் நேசிப்பது போல் மனிதர்கள் எவரும் எவரையும் நேசிப்பதாக நான் அறிய மாட்டேன் எனும் கூற்றுக்குரியவர்
1. அபூஸுப்யான் 2. அபூபக்கர் (றலி) 3. உமர் (றலி)
4. அபூலஹப் 5. ஸைத் இப்னு தஸினா (றலி)

22. முஹம்மது நபி (ஸல்) அவர்களது இறுதி நபி எனும் கத்முன் நுபுவ்வாத் கோட்பாட்டை மறுப்பவர்கள்
1. முஃதஸிலாக்கள் 2. ஸைதியாக்கள் 3. அஷ்அரிய்யாக்கள்
4. இமாமிய்யாக்கள் 5. காதியானிகள்

23. பின்வருவனவற்றுள் ஒருவரை நபி என அடையாளப்படுத்தும் பண்புகளில் ஒன்று
1. கராமத் 2. முஃஜிஸாத் 3. கியாதத் 4. இமாரத் 5. இராதத்

24. அல்குர்ஆனின் மீது ஒருவருக்கு இருக்கும் உளரீதியான கடமைகளை மட்டும் கொண்ட தொகுதி
1. ஈமான், தக்வா, பணிவு, ததப்புர் 2. ஈமான், ததப்புர், பணிவு, தக்வா
3. ஈமான் ததப்புர் தக்வா இத்திபாஉ 4. ஈமான், இத்திபாஉ, தவக்குல், இக்லாஸ்
5. இக்லாஸ், பணிவு, தவக்குல், தக்வா

25. கலீபா உமர் (றலி) அவர்களின் ஆட்சியின் போது எகிப்தின் கவர்னராக இருந்த சஹாபி
1. அப்துர் ரஹ்மான் இப்னு அவ்ப் (றலி) 2. அம்ரு இப்னு ஆஸ் (றலி)
3. கஃப் இப்னு மாலிக் (றலி) 4. முஆத் இப்னு ஜபல் (றலி)
5. அலி (றலி)

26. தலைமைத்துவத்தை குறித்து நிற்கும் சொல்
1. அல் கிஸாஸா 2. அல்கியாமா 3. அல்பதானா 4. அர்ரிஸாலா 5. அல் கியாதா

27. இஸ்லாத்தில் வாரிசுரிமையோடு தொடர்பான கலைகளை உள்ளடக்கிய தொகுதி
1.இல்முல் மீராஸ் , இல்முல் ஜரஹ் வத்தஃதீல் , அத்தரிகா
2.இல்முல் பராஇழ் , இல்முல் ஜரஹ் வத்தஃதீல் , அத்தரிகா
3. இல்முல் மீராஸ் , இல்முல் பராஇழ் , அத்தரிகா
4. இல்முல் மீராஸ் , இல்முல் பராஇழ் , உலூமுல் குர்ஆன்
5. இல்முல் மீராஸ் , இல்முல் ஜரஹ் வத்தஃதீல் , உலூமுல் குர்ஆன்

28. ஹதீஸ்களை பாதுகாப்பதற்காக முயற்சி செய்த ஓர் உமையா கலீபா

1. கலீபா முஆவியா 2.கலீபா உமர் இப்னு அப்துல் அஸீஸ் 3.மர்வான்

4. ஹஜ்ஜாஜ் பின் யூஸுப் 5. கலீபா ஹாரூன் ரஷீத்

29. அல்குர்ஆனுக்கும் சுன்னாவுக்கும் இடையே காணப்படும் தொடர்பை எடுத்துக்காட்டும் காரணிகளுள் பிரதானமானது

1. அல்குர்ஆனின் சட்டங்களை ஸுன்னா உறுதிப்படுத்தியமை
2. அல்குர்ஆனில் பொதுப்படையாக கூறப்பட்ட ஒரு கருத்தை சுன்னா குறிப்பாக்கியமை
3. அல்குர்ஆன் விளக்கிய ஒரு பொது விதியை சுன்னா மேலும் சில விதிகளுடன் இணைத்தமை
4. அல்குர்ஆன் சுருக்கமாக கூறிய விடயங்களை சுன்னா விரிவாக கூறியமை
5. நபியவர்களின் வாழ்க்கை எனும் சுன்னா அல்குர்ஆனாகவே காணப்பட்டமை

30. அல் அம்ரு பில் மஃரூப் வன்நஹ்யு அனில் முன்கர் என்பது

1. நல்லவர்களை நண்பர்களுக்கும் தீயவர்களை ஒதுக்கி வாழ்வதும்
2. நன்மையை ஏவுவதும் தீமையை தடுப்பதுமாகும்
3. இஸ்லாமிய வழியில் குடும்பத்தை வழி நடத்தலாகும்
4. அனைவரையும் சகோதரர்களாக ஏற்றுக்கொள்ளலாகும்
5. சமூகங்களுக்கிடையில் நல்லுறவை பேணுதலாகும்

31. பின்வருவனவற்றை கவனத்தில் கொள்க

A - கி.பி ஏழாம் நூற்றாண்டில் பெண் ஒதுக்கப்படுவதும் ஒடுக்கப்படுவதும் நியாயமற்றது எனும் குரலில் உலகில் இஸ்லாம் ஒரு புரட்சியை ஏற்படுத்தியது

B - ஆண், பெண் இருபாலாரும் ஒரே மூலத்திலிருந்து வந்தவர்கள் எனும் வகையில் இறைவனிடத்தில் தம் நற்கருமங்களுக்காக கூலியை பெற்றுக் கொள்வதில் சமமானவர்கள் ஆவர்.

C - பெண் தீமையின் பிறப்பிடம் என்றோ ஆண் கெடுவதற்கு பெண்ணே காரணம் என்றோ இஸ்லாம் கூறுவதில்லை

D - பெண் ஆணுக்கு பணிவிடை செய்வதற்காக படைக்கப்பட்டுள்ளதோடு அவளது உழைப்பின் மூலம் பெரும் வருமானத்தை தனது கணவனிடம் ஒப்படைப்பது அவசியமாகும்

E - சமூக நலப் பணிகளில் பெண் ஈடுபடுவது அவசியம் இல்லை என்பதை இஸ்லாம் ஏற்றுக் கொள்கிறது.

மேற்குறிப்பிடப்பட்டவற்றுள் பால்நிலை சமத்துவம் தொடர்பான இஸ்லாமிய கருத்துக்களை மாத்திரம் உள்ளடக்கிய தொகுதியினை தெரிவு செய்க.

1. ABC 2. ABD 3. ABE 4. BCD 5. BDE

32. பின்வருவனவற்றை கவனத்தில் கொள்க

A - சொத்துரிமையாளருக்கும் வாரிசுக்கும் இடையில் திருமண உறவு காணப்படல்

B - வாரிசாக உள்ளவர் அடிமையாக இருத்தல்

C - சொத்துடையவர் மரணிக்கும் போது அவரது வாரிசுகள் உயிருடன் காணப்படல்

D - வாரிசு அல்லது சொந்தக்காரர் முஸ்லிமல்லாதவராக இருத்தல்

E- சொத்துக்களின் உரிமையாளர் வாரிசு மூலம் கொலை செய்யப்படல்

மேற்குறிப்பிட்டவற்றுள் வாரிசு சொத்தை பெற்றுக்கொள்ள தடையாக அமையும் காரணிகளை மாத்திரம் உள்ளடக்கிய தொகுதியினை தெரிவு செய்க

1. ABC 2. ACD 3.ADE 4. BCD 5. BDE

33. பின்வருவனவற்றை கருதுக

A - கருத்து வேறுபாடுகளின் போது ஒருவரை ஒருவர் மதித்து நடத்தல்

B - கருத்து வேறுபாடு உடைய அம்சங்களில் பரஸ்பரம் நியாயம் காணல்

C - அகீதா போன்ற அடிப்படையான விடயங்களில் விட்டுக் கொடுத்து சமரசம் பேணல்

D - கருத்துக்களில் பிடிவாத போக்கை தவிர்த்தல்

E - வாக்குவாதத்தின் போது அடுத்தவர் பற்றிய நல்லெண்ணத்தை வளர்த்துக் கொள்ளல்

1. ABCD 2. ABDE 3. ABCE 4. BCDE 5. CDEA

34. பின்வருவன சட்ட மூலாதாரங்கள் தொடர்பான சில கூற்றுகள் ஆகும்

A - தீர்ப்பொன்றை மேற்கொள்ள ஒன்றுக்கு மேற்பட்ட முஜ்தஹித்கள் இருக்க வேண்டும்

B - பிரதேச, நிற, மொழி வேறுபாடுகளை தவிர்த்து அனைவரும் கருத்தில் ஒற்றுமைப்பட வேண்டும்

C - பெரும்பான்மை முஜ்தஹித்களின் முடிவுகள் தீர்ப்பாக கொள்ளப்பட முடியும்

D - முஜ்தஹித்களில் பெரும்பான்மையானோர் குறித்ததொரு தீர்ப்பில் உடன்படுவதோடு மற்றும் சிலர் அதில் முரண்பட முடியும்

E - ஒப்பு நோக்குதல் அடிப்படையில் புதிய பிரச்சினைகளுக்கு தீர்ப்பு வழங்குதல் அங்கீகரிக்கப்பட்டுள்ளது

F - நபித்தோழர்களது கருத்துக்களும் வாழ்வும் துணை மூலாதாரமாக கொள்ளப்படுகிறது.

மேற்படி கூற்றுக்களுள் இஜ்மா தொடர்பான கருத்துக்களை மாத்திரம் கொண்ட தெரிவனை தெரிவு செய்க.

1. ABCD 2. ABCE 3. ABCF 4. ACEF 5. BCDF

35. இஸ்லாமிய பொருளாதாரம் பற்றிய பின்வரும் கருத்துக்களை கவனத்தில் கொள்க

A - வஹியின் வழிகாட்டலில் கட்டி எழுப்பப்பட்டுள்ளமை

B - ஒழுக்கத்துக்கும் பண்பாட்டிற்கும் முக்கியத்துவம் கொடுக்கின்றமை

C - செல்வச் சுழற்சிக்கு வழி வகுத்து செல்வம் ஒரு சிலரிடம் தேங்கி நிற்பதை தடுக்கின்றமை

D - கொடுக்கல் வாங்கல் போது இலாபத்தை மட்டும் நோக்காக கொண்டு தொழிற்படுகின்றமை

E - தனிமனித நலன், சமூக நலன் ஆகிய இரண்டுக்கும் இடையில் சமநிலை பேணுகின்றமை

மேற்குறிப்பிட்டவற்றுள் இஸ்லாமிய பொருளாதார கோட்பாட்டின் தனிச்சிறப்பை வெளிக் காட்டும் கூற்றுக்களை மாத்திரம் உள்ளடக்கிய விடையினை தெரிவு செய்க

1. ABCD 2. ABCE 3. ACDE 4. ABDE 5 - BCDE

36. நோன்பு நோற்கும் விடயத்தில் கர்ப்பிணிகள் பாலூட்டும் தாய்மார்கள்

1. கப்பாராவுடன் நோன்பை விட அனுமதிக்கப்பட்டுள்ளனர்

2. அவர்கள் நோன்பு நோற்பது ஹராமாகும் பின்னர் நோன்பு நோற்க முடியுமான நிலை ஏற்படுமாயின் அதனை கழாச் செய்ய வேண்டும்.

3. நோன்பை விட்டு விட அனுமதிக்கப்படவில்லை.

4. கழாச்செய்தல் என்ற நிபந்தனையுடன் நோன்பை விட அனுமதிக்கப்பட்டுள்ளனர் .

5. கப்பாராவுடன் நோன்பை கழாச் செய்ய வேண்டும்

37. இஸ்லாமிய வரலாற்றில் பைத்துல்மால் நிர்வாகத்திற்கென பாதுகாப்பான தனி கட்டடங்கள் அமைக்கப்பட முன்னர் அது.

1. நபிகள் நாயகம் சல் அவர்களின் பொறுப்பில் இருந்தது
2. கலீபாக்களின் கண்காணிப்பின் கீழ் இருந்தது
3. மஸ்ஜிதை அண்மித்த பொது இடத்தில் அமைந்திருந்தது
4. கவர்னர்களின் பொறுப்பில் இருந்தது
5. பைத்துல் மாலுக்கு என நியமிக்கப்பட்டவர்களின் பாதுகாப்பில் இருந்தது

38. கவாரிஜ்களின் உட்பிரிவுகளில் ரஜ்ம் தண்டனையை மறுத்தல் காபிர்களின் குழந்தைகளும் நரகம் நுழைவர் மற்றும் பெண் மீது கூறப்படும் அவதூருக்கு மாத்திரம் தண்டனை வழங்குதல் போன்ற விடயங்களை உள்ளடக்கிய பிரிவினர்

1. அஸ்ஸபரிய்யா 2. அல்அஸாரிக் 3. அல்அபாலிய்யா
4. அந்நஜ்தாத் 5. வாஸிலிய்யா

39. சுவனத்தின் திறவுகோல் என நபி (ஸல்) அவர்கள் குறிப்பிட்ட அமல்

1.கலிமா 2.தொழுகை 3.ஸக்காத் . 4. நோன்பு 5. ஹஜ்.

40. ஷரீஆ என்ற சொல் அல்குர்ஆனில் எத்தனை தடவை இடம் பெற்றுள்ளது

1. 01 2. 02 3. 03 4. 04 5. 05

41. நிரல் "ஆ" க்கு பொருத்தமானது நிரல் "ஆ" வில் உள்ளது அதனை தெரிவு செய்க.

| அ | ஆ |
|---|---|
| 1. இமாம் புஹாரி | A. ஹி.194 |
| 2. இமாம் முஸ்லிம் | B. ஹி 215 |
| 3. இமாம் அபூதாவூத் | C. ஹி 204 |
| 4. இமாம் திர்மிதி | D. ஹி 201 |
| 5. இமாம் நஸாஈ | E. ஹி 209 |

1.ADCEB. 2.ACDEB. 3.DAECB 4.DACEB 5. DACBE

42.

| அ | ஆ |
|---|---|
| 1. நூஹ் நபி | A. இரும்புருக்கு |
| 2. ஸகரிய்யா நபி | B. கால்நடை மேய்ப்பு |
| 3. தாவூத் நபி | C. தச்சுத் தொழில் |
| 4. முஹம்மது நபி | D. கப்பல் கட்டுதல் |

1.ABCD. 2.ACDB. 3.BACD 4.CDBA 5. DCAB

43.

| அ | ஆ |
|---|---|
| 1. பொறாமை | A. அல்லாஹ்வுக்குரிய போர்வை மனிதனுக்குரியதல்ல |
| 2. அகம்பாவம் | B. மனிதன் செய்யும் நற்செயல்களை வீணாக்கி விடக் கூடியது |
| 3. கோள் | C. இறைவன் வழங்கி இருப்பதைக் கொண்டு திருப்தி அடையாத நிலை |
| 4. பேராசை | D. பரிகாசத்துக்கேனும் பயன்படுத்தக் கூடாது என வலியுறுத்தப்பட்ட ஒன்று |
| 5. பொய் | E. சகோதரத்துவ பிணைப்பை முறித்து விடக்கூடியது |

1.ABCDE. 2.ACDEB. 3.BCDEA 4.BAECD 5. CDEAB

44. அ ஆ

| அ | ஆ |
|---|---|
| 1. மகாஸித்q | A. சட்டவிதிகள் |
| 2. கவாயித் அல் பிக்ஹிய்யாq | B. நோக்கங்கள் |
| 3. ஹாஜிய்யாத்q | C. ஆடம்பர நிலை |
| 4. தஹ்ஸீனிய்யாத்q | D. அத்தியாவசிய நிலை |
| 5. ழரூரிய்யாத் | E. தேவை நிலை |

1.ABCDE. 2.ACBDE. 3.ADCEB 4.BAECD 5. BCDEA

45.

| அ | ஆ |
|---|---|
| 1. பைஉல் முஅஜ்ஜல் | A. பொறுப்புச் சாட்டுதல் |
| 2. கர்ளுல் ஹஸன் | B. தரகர் தொழில் |
| 3. அத்த:மீன் | C. வட்டியில்லா அழகிய கடன் |
| 4. வக்காலா | D. பிற்போடப்பட்ட கொடுப்பனவு வியாபாரம் |
| 5. ஸம்ஸரா | E. காப்புறுதி |

1.ADCEB. 2.ACDEB. 3.DCEAB 4.DACEB 5. DACBE

46 தொடக்கம் 50 வரையிலான வினாக்களில் இரண்டு வகையான கூற்றுக்கள் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு வினா தொடர்பாகவும் தரப்பட்டுள்ள சோடிகளுக்கு மிகப் பொருத்தமான இலக்கத்தை குறிக்க.

| இல | முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று |
|---|---|---|
| 1 | சரியானது | சரியானது |
| 2 | பிழையானது | சரியானது |
| 3 | சரியானது | பிழையானது |
| 4 | பிழையானது | பிழையானது |
| 5 | சரியானது | முதலாம் கூற்றை மேலும் விளக்குகிறது |

| இல | முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று |
|---|---|---|
| 46 | இல்ஹாத் கோட்பாடு ஆரம்பத்தில் ஹனீப்களால் தோற்றுவிக்கப்பட்டது | அப்துல்லா இப்னு உபை முல்ஹித்களில் ஒருவனாவான் |
| 47 | கவாரிஜ்கள் ஸிப்பீன் போரின் போது தோற்றம் பெற்றனர் | அலி ரலி அவர்களே முதல் கலிபாவாகவும் இமாமாகவும் இருக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் தோன்றியவர்கள் ஷீஆக்களாவர் |
| 48 | மக்கி மதனி வசனங்கள் கருத்திலும் மொழி அமைப்பிலும் ஒரே தன்மையை கொண்டவை | அல்குர்ஆனில் நாசிக் மன்சூக் என்ற வகையில் சில வசனங்கள் காணப்படுகின்றன. |

| | | |
|---|---|---|
| 49 | அல்குர்ஆன் இறைவனின் தூய வார்த்தைகள் ஆகும் | அல்குர்ஆனின் விடய உள்ளடக்கம் சொல்லாட்சி உவமைகள் இலக்கிய நயம் ஆகியன மனித ஆற்றலுக்கு அப்பாற்பட்டவையாகும் |
| 50 | அனைத்து ரசூல்மார்களுக்கும் வழங்கப்பட்ட தீன் ஒன்றாகவும் சட்டங்கள் வேறுபட்டதாகவும் காணப்பட்டன | அல்குர்ஆனை புரிந்து கொள்ள ஹதீஸ்கள் தேவைப்படுவதில்லை |

மாகாணக்கல்வித் திணைக்களம்
வடக்கு மாகாணம்
**முன்னோடிப் பரீட்சை – 2024**

| | | | | |
|---|---|---|---|---|
| இஸ்லாம்<br>Islam (மேலதிக வாசிப்பு 10 நிமிடம்) | Two Hours<br>Gr - 13 (2024) | T | 44 | II |

**அறிவுறுத்தல்கள் :**

பகுதி I இருந்து இரண்டு வினாக்களையும் பகுதி II இருந்து மூன்று வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி I

01.

01. இஜ்ஜிஹாத்துக்கான அல்குர்ஆனின் ஆதாரங்களில் ஒன்றை விபரிக்குக.
02. கருத்து வேறுபாடுகளின் போது பேணவேண்டிய இஸ்லாம் வலியுறுத்தியுள்ள ஒழுக்கங்களுள் நான்கினை குறிப்பிடுக
03. கருத்து வேறுபாடுகளை களைவதற்கான வழிமுறைகள் மூன்றினை குறிப்பிட்டு விளக்குக
04. ஒரு முஸ்லிமின் வீட்டு வாழ்க்கை, பௌதிக அமைவிடம், பௌதிக சூழல் தொடர்பான இஸ்லாத்தின் வழிகாட்டல்களுள் நான்கினை விவரிக்குக

(புள்ளிகள் 2+4+6+8)

02.

1. தலாக் என்பதன் பொருள் யாது
2. தலாக் ரஜஈ, பாயின் ஆகிய இரு பிரிவுகளையும் தெளிவுபடுத்துக
3. இத்தா என்பதனை வரைவிலக்கணப்படுத்தி அதன் வகைகளில் இரண்டை குறிப்பிட்டு விவரிக்க
4. இத்தாவின் நோக்கங்கள் நான்கை விரிவாக விளக்குக.

(புள்ளிகள் 2+4+6+8)

03.

1. மஹ்ரம், அஜ்னபி ஆகிய பதங்களை வரைவிலக்கணப்படுத்துக
2. திருமணத்தின் முக்கியத்துவம் பற்றி இஸ்லாத்தின் போதனைகள் நான்கை குறிப்பிட்டு அவற்றுள் இரண்டை சுருக்கமாக விளக்குக
3. கணவன் மனைவி ஆகிய இருவரினதும் கடமைகள் மூன்றை தனித்தனியே பட்டியற்படுத்தி அவை சீரான குடும்ப வாழ்வுக்கு எவ்வாறு பங்காற்றுகிறது என்பதை இஸ்லாமிய போதனைகளின் அடிப்படையில் நியாயப்படுத்துக.
4. குடும்ப வாழ்வில் ஏற்படும் பிரச்சனைகளை தவிர்ப்பதற்கான இஸ்லாமிய வழிகாட்டல்களை ஆராய்க.

(புள்ளிகள் 2+4+6+8)

## பகுதி II

04.

01. இஸ்லாத்தில் சமூக வாழ்வின் முக்கியத்துவத்தை விளக்குக
02. இஸ்லாமிய சமூக அமைப்பின் சிறப்பம்சங்களுள் சமத்துவம், சகோதரத்துவம் பற்றி விவரிக்குக.

05.

01. இஸ்லாமிய ஷரீஆ பற்றி குறிப்பிட்டு தீன், ஷரீஆ என்பவற்றிற்கிடையிலான வேறுபாட்டை விளக்குக.
02. பிரபஞ்சம் மனிதன் வாழ்வு ஆகியவை தொடர்பான இஸ்லாமிய கண்ணோட்டத்தை தெளிவுபடுத்துக.

06.

01. மகாஸிதுஷ் ஷரீஆ என்றால் என்ன. அத்துறை தொடர்பான வரலாற்றை சுருக்கமாக விளக்குக.
02. மகாஸிதுஷ் ஷரீஆ வின் வகைப்படுத்தல் மூன்றினையும் குறிப்பிட்டு அவற்றை விளக்குக.

07.

01. இஸ்லாத்தின் சிறப்பம்சங்கள் ஐந்தை குறிப்பிட்டு அவற்றின் ஊடாக இஸ்லாம் ஒரு சம்பூர்ண வாழ்க்கை திட்டம் என்பதை நிறுவுக
02. இஸ்லாமிய சட்டவாக்கத்தில் சுன்னாவின் முக்கியத்துவத்தினை ஐந்து அம்சங்கள் ஊடாக விளக்குக.

(புள்ளிகள் 10+10)

08. பின்வருவன பற்றி சிறு குறிப்பு எழுதுக

01. ஹுகூகுல் இபாத்
02. பைத்துல் மால்
03. மறுமை நிகழ்வுகள்
04. பெற்றோர் பிள்ளைகளுக்குச் செய்ய வேண்டிய கடமைகள்

(புள்ளிகள் 5+5=5+5)